# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS

# அரையாண்டுத்தேர்வு

## 2024/2025

# தமிழ்

# ஆண்டு 4

நேரம்: 120 மணித்துளிகள்

நாள்: சனிக்கிழமை

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 10

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடையின் முன் உள்ள கூட்டினுள் புள்ளடி இடுக.

1. நெடில் எழுத்துகளின் எண்ணிக்கை
   - ☐ 10 ☐ 7 ☐ 5

2. முப்பால்களுள் ஒன்று
   - ☐ அறம் ☐ மறம் ☐ புறம்

3. சேவல் கூவும் அது போலக் கோழி
   - ☐ பேசும் ☐ கரையும் ☐ கொக்கரிக்கும்

4. நாம் தமிழ் மொழியைக்
   - ☐ கற்போம் ☐ கற்பாய் ☐ கற்றேன்

5. திருடர்களால் திருடமுடியாத செல்வம்
   - ☐ கல்வி ☐ பொன் ☐ பொருள்

6. கலைகளுள் ஒன்று
   - ☐ சிரித்தல் ☐ ஆடல் ☐ நடத்தல்

7. 700 என்பதன் எழுத்து வடிவம்
   - ☐ எழுநூறு ☐ எளுநூறு ☐ எலுநூறு

8. மகிழன் சிரித்தான். சிரித்தான் என்பது
   - ☐ உயர்திணை ☐ அஃறிணை ☐ பெண்பால்

9. பனி + பொம்மை என்பதைச் சேர்த்து எழுதினால்
   - ☐ பனிபொம்மை ☐ பனிம்பொம்மை ☐ பனிப்பொம்மை

10. பள்ளிக்கூடம் என்பதைப் பிரித்து எழுதினால்
    - ☐ பள்ளிக் + கூடம் ☐ பள்ளி + கூடம் ☐ பள்ளி + குடம்

11. தந்தி முறையைக் கண்டுபிடித்தவர்
    - ☐ கிரகம்பெல் ☐ மார்க்கோணி ☐ சாமுவேல்

12. வல்லின மெய் எழுத்துகள்
    - ☐ ங் ஞ் ண் ந் ம் ன் ☐ ய் ர் ல் வ் ழ் ள் ☐ க் ச் ட் த் ப் ற்

13. ஆடி மாதத்துக்குப் பின் வரும் மாதம்
    - ☐ பங்குனி ☐ ஆவணி ☐ தை

14. முப்பால்களையும் விளக்கும் நூல்
    - ☐ நாலடியார் ☐ திருக்குறள் ☐ சிலப்பதிகாரம்

15. தமிழரது முதன்மையான கொண்டாட்டங்களுள் ஒன்று
    - ☐ தீபாவளி ☐ தைப்பொங்கல் ☐ நத்தார் விழா

16. ஆடிப்பிறப்புக்கு நாளை விடுதலை என்ற பாடலைப் பாடியவர்
☐ பாரதியார் ☐ திருவள்ளுவர் ☐ சோமசுந்தரப்புலவர்

17. எண்ணும் எழுத்தும் இரு கண்களைப் போன்றவை என்கிறார்
☐ திருவள்ளுவர் ☐ பாரதியார் ☐ பாரதிதாசன்

18. அது ஓடியது. அவை
☐ ஓடினான் ☐ ஓடினார் ☐ ஓடின

19. சிலப்பதிகாரத்தை எழுதியவர்
☐ பாரதியார் ☐ இளங்கோவடிகள் ☐ பாரதிதாசன்

20. சிறுவன் பாடம் படித்தான். சிறுமி பாடம்
☐ படித்தார்கள் ☐ படித்தது ☐ படித்தாள்

20x1 = 20 புள்ளிகள்

## 2 பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

1. அம்மா ________ ச் சமைத்தார்.
(உணவை, உணவில்)

2. நான் ________ எழுதினேன்.
(எழுதுகோலால், எழுதுகோலின்)

3. குழலி பூங்காவுக்குச் சென்றாள். ________ மழை பெய்தது.
(அப்பொழுது, இப்பொழுது)

4. காட்டில் விலங்குகள் பல உள்ளன. ________ நரியும் ஒன்று.
(அவற்றுள், இவற்றுள்)

5. மாணவர்கள் ________ நடந்து சென்றார்கள்.
(பள்ளிக்கு, பள்ளியை)

5x2 = 10 புள்ளிகள்

## 3 தரப்பட்டுள்ள சொற்களை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

| | |
|---|---|
| 1. பந்து | 1. |
| 2. மரம் | 2. |
| 3. அஞ்சல் | 3. |
| 4. நீலம் | 4. |
| 5. மழை | 5. |

5x2 = 10 புள்ளிகள்

## 4 பொருத்தமான சொல்லை வைத்து இடைவெளியில் எழுதுக.

விம்மி விம்மி | சலசல | கமகம | ஓடி ஓடி | பளபள

1. மாணவர்கள் ________ விளையாடினார்கள்.

2. பூக்கள் ________ என மணம் வீசின.

3. குழந்தை பசியால் ________ அழுதது.

4. ஓடையில் நீர் ________ என ஓடியது.

5. தோடு ________ என மின்னியது.

5x2 = 10 புள்ளிகள்

## 5 சொற்களை ஒழுங்குபடுத்திச் சொல்லியம் ஆக்குக.

1. கல்வி / எழுத்து / இளமையிற் / சிலையில்

______________________________

2. ஆசிரியர் / அழைத்தார் / மாணவனை

______________________________

3. வானத்தில் / பறந்தன / பறவைகள்

______________________________

4. பொதுமறை / என்றும் / அழைப்பர் / திருக்குறளை

______________________________

5. அழகாக / மிகவும் / இருக்கிறது / ஓவியம்

______________________________

5x2 = 10 புள்ளிகள்

## 6 பாடநூல் வினாக்களுக்கு விடை எழுதுக.

1. பழைமையான தமிழ் இலக்கியங்கள் இரண்டு எழுதுக.

______________ ______________

2. மன்னருக்கு எங்கே மதிப்பிருக்கும்?

______________________________

3. முற்காலத்தில் மக்கள் எவ்வாறு செய்திகளை அறிவித்தனர்?

______________________________

4. வினைச்சொற்கள் இரண்டு எழுதுக.

______________ ______________

5. காட்டு விலங்குகளின் பெயர்கள் இரண்டு எழுதுக.

______________ ______________

5x2 = 10 புள்ளிகள்

## 7 படத்தைப் பார்த்து ஐந்து சொல்லியங்கள் எழுதுக.



1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5x3 = 15 **புள்ளிகள்**

## பகுதி 2
## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

மாமரம் பல இனங்களைக் கொண்டது. இதன் இலை, வேர் என்பன மருந்தாகப் பயன்படுகின்றன. மாமரத்தின் காயை மாங்காய் என்று அழைப்பார்கள். இது புளிப்புச் சுவை உடையது. மாமரத்தில் மாங்காய்கள் நீண்ட காம்புகளுடன் கொத்துக்கொத்தாகத் தொங்கும். மாம்பழம் மிகவும் இனிப்பானது. முக்கனிகளுள் மாம்பழமும் ஒன்று. மாம்பழத்தில் இருந்து பழச்சாறு செய்வார்கள். தமிழர் விழாக்களின்போது மாவிலைத் தோரணம் கட்டுவார்கள். பறவைகள் மாம்பழங்களைக் கொத்தித் தின்னும். மாமரம் மிகவும் பயனுள்ள ஒரு மரம்.

1. மாமரத்தின் இலை, வேர் என்பன எதற்குப் பயன்படுகின்றன?

______________________________

2. மாம்பழத்தில் இருந்து என்ன செய்வார்கள்?

______________________________

3. எது புளிப்புச் சுவை உடையது?

______________________________

4. மாவிலைத் தோரணம் எப்பொழுது கட்டப்படுகிறது?

______________________________

5. பறவைகள் மாம்பழங்களை எப்படித்தின்னும்?

______________________________

5x2 = 10 புள்ளிகள்

2. தரப்பட்டுள்ள அறிவித்தலை வாசித்து, அதன் கீழுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளமிடுக.

**தமிழ்மொழி நாள் கவிதைப் போட்டி 2025**

**போட்டி நடைபெறும் காலம்: 10.03.2025**

**தொடங்கும் நேரம்: 12:00 மணி.**

**இடம்: பள்ளி மண்டபம் சுவீடன்**

**போட்டிக்கான பிரிவுகள்: கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு**

**தொடர்புகளுக்கு: 0046 617144120**

1. இது தமிழ்மொழி நாளுக்கான கவிதைப் போட்டி. ( )
2. இப்போட்டி தொடங்கும் நேரம் 15:00 மணி. ( )
3. கவிதைப்போட்டி யேர்மனியில் நடைபெறும். ( )
4. போட்டிகளுக்கான பிரிவுகளுள் ஒன்று கீழ்ப்பிரிவு. ( )
5. கவிதைப் போட்டி ஆவணி மாதத்தில் நடைபெறும். ( )

5x1 = 5 புள்ளிகள்

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 20 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |